# எல்லாவற்றையும் விட்டு



**"சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்." (லூக் 5:10,11).**

**"இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு: எனக்குப் பின்சென்று வா என்றார். அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின்சென்றான்." (லூக் 5:27,28).**

மேற்க்கண்ட வசனங்களில் நாம் காண்பது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை ஊழியத்திற்கு அழைத்தபொழுது அவருக்கு கீழ்படிந்து, அவருக்கு பின்சென்றதை பற்றி கூறுகிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம், "எல்லாவற்றையும் விட்டு" என்ற வார்த்தையாகும். சீமோனாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் சற்று முன்னர் வரை தங்கள் தொழிலான மீன் பிடிப்பதில் மிகவும் கவனமாக ஈடுப்பட்டு கொண்டிருந்தனர். அது அவர்களுடைய வாழ்வாதாரம். அவர்களை சார்ந்து ஒருவேளை பெற்றோர், மனைவி, பிள்ளைகள் போன்ற குடும்ப உறுப்பினர்கள் இருந்திருக்க கூடும்.

ஆனால் இதை எதைப்பற்றியும் சிந்திக்காமல், ஆண்டவர் அழைத்தவுடனே அவர்கள் அனைவரும் தங்கள் படவுகளைக் கரையிலே கொண்டு போய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள். வலை கிழியத்தக்கதாய்

தாங்கள் பிடித்த மீன்களை பற்றியோ, தங்கள் படவுகள் மற்றும் குடும்ப காரியங்களை மற்றவரிடம் ஒப்படைப்பதை பற்றியோ **(லூக் 5:6)** அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அதேபோல் ஆயத்துறையில் வரியை வாங்கிகொண்டு உட்கார்ந்திருந்த லேவி, ஆண்டவர் அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்கு பின்சென்றான் **(லூக் 5:27,28)** என்று வசனம் கூறுகிறது. இவரும் தன் குடும்பத்தை பற்றியோ, தன் கையில் உள்ள வரி பணம் பற்றியோ, தன்னுடைய அரசாங்க வேலை என்று எதை பற்றியும் கவலைப்படாமல் உடனே ஆண்டவருக்கு பின்சென்றார்.

இங்கு அவர்கள் ஆண்டவருக்கு பின்சென்றது ஏதோ தங்களுக்கு பெரியதாக கிடைக்கபோகிறது என்பதற்காக அல்ல, அல்லவென்றால் ஏதோ ஒரு கொள்கையை நிறைவேற்ற அரசியல் / சமூக தளங்களில் கலந்து கொள்வதை போல் அவர்கள் ஆண்டவரை பின்செல்லவில்லை. அவர்களை ஆண்டவர் சந்தித்த பொழுது, அவர்களுடைய உள்ளான மனதில் தங்களுடைய பாவ நிலைமையை உணர்ந்தனர், தங்களை போல் மற்றவரும் இப்படிப்பட்ட பாவத்தின் கீழ் அடிமைபட்டிருப்பதை உணர்ந்தனர். **ஆண்டவருடைய பார்வையும் (கண்டு), அவருடைய அழைப்பும் (பின்சென்று வா), தங்கள் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை க்ஷண பொழுதில் அறிந்துகொள்ள அவர்களுக்கு உதவினது**, அதுவே உடனே எல்லாவற்றையும் விட்டு அவரை பின்செல்ல அவர்களை தூண்டினது.

**அப் 4:13** கூறுகிறது **"பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள்"**, ஆம் அவர்கள் படிப்பறியாதவர்கள், ஞானமில்லா பேதைமையுள்ளவர்கள், மனுஷரால் வெறுக்கப்பட்ட ஆயத்துறையில் பணியாற்றியவர்கள், ஆனால் அவர்களைதான் ஆண்டவர் அழைத்தார். அவர்களுடைய அழைப்பு அநாதியானது. இன்று வரையிலும் உலக முழுவதும் அவர்களை பற்றி பேசப்பட காரணம் ஆண்டவர் அவர்களை அழைத்த அழைப்பும், அதற்கு அவர்கள் கீழ்படிந்ததுமே.

**யோ 6:59,60 "கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார். அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்."** மேலும் **யோ 6:66,67 "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்."**, ஆனால் இதற்கு பேதுரு கூறிய பதிலே, எது அவர்களை ஆண்டவரை பின்பற்றி செல்ல வைத்தது என்பதை காண்பிக்கிறது. **யோ 6:68,69 "சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்."**, ஆம் அவருடைய கிருபை பொருந்திய பார்வை, அவருடைய

வார்த்தை, அவரோடு கூடியிருக்கிற ஐக்கியம் ஆகிய இவைகளே காந்தத்தை பற்றிய இரும்பை போல அவரை விடாமல் பற்றிகொள்ள செய்தது.

ஒருவேளை மனுஷிக பிரகாரமாக அவர்களிடம் குறைகள் இருந்தாலும், தங்களில் யார் பெரியவன் என்ற எண்ணம் அவர்களிடம் காணப்பட்டாலும், ஆண்டவரை போர்சேவகர்கள் பிடிக்க வந்தபொழுது, ஓடி ஒளிந்திருந்தாலும், தனக்கு அவரையே தெரியாது என்று பேதுரு மறுதலிக்கவே செய்தாலும், அப்போஸ்தலர்களாய் தெரிந்துகொள்ளபட்ட, அழைக்கப்பட்ட அவர்களுடைய இருதயம் "நீரின்றி வாழ்வேது தேவா, உம் நினைவின்றி மகிழ்வேது இறைவா" என்று சொல்லி, தங்கள் மணவாளனை இழந்து தவிக்கும் மணவாட்டி போலவே காணப்பட்டது. **யோவான் 21ஆம்** அதிகாரத்தில், மறுபடியும் மீன்பிடி தொழிலுக்கு அவர்கள் சென்றபொழுதும், ஆண்டவர் அன்பு அவர்களை மறுபடியும் தேடி வந்து, அவர்களை அழைத்து அவர்களுடைய அழைப்பின் நோக்கத்தை உணர செய்தது.

இதன்பின் பரிசுத்த ஆவியினால் நிரப்ப பட்டு, வல்லமையாக ஆண்டவருடைய ஊழியத்தை செய்தனர். இரத்த சாட்சிகளாய் தங்களை ஆண்டவர் பணிக்கென ஒப்புக்கொடுத்தனர். ஆதலால் இன்றளவும் அவர்களுடைய பெயர் உலகமுழுவதும் அறியபடுகிறது. பரலோகத்தில் அவர்களுடைய ஸ்தலத்தை ஆண்டவர் ஆயத்தம் பண்ணி தந்திருப்பார். இவ்வுலகத்தில் உள்ள எல்லாவற்றையும் விட்ட அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதையும் இழந்து போகவில்லை. **யோ 17:7-9 "நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே."** கூறியுள்ளபடி, அவர்கள் அவருக்காக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இதை போன்ற ஒரு அழைப்பையே ஆண்டவர் இன்று நமக்கும் தருகிறார். சிலுவையை எடுத்து கொண்டு அவரை பின்செல்லும் அனைவருக்கும் நித்திய பாக்கியமும், மேன்மையும் உண்டு. ஆமென், அல்லேலூயா.